அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 14/92

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம் - கொழும்பு. 7
1992, மார்ச்சு மாதம் 11 ஆந் திகதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபை ஆளுநர்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைத் தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
அரசாங்க அதிபர்களுக்கும்,
அரசாங்க கூட்டுத்தாபனங்கள்,
நியதிச் சபைகளின் தலைவர்களுக்கும்.

ரம்ழான் பண்டிகை காலத்தில் சேவைகள்,
பொருட்கள் வழங்குதல்.

உங்கள் கவனம் 1991 மார்ச்சு மாதம் 08ஆம் திகதிய 9/91ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கு ஈர்க்கப்படுகின்றது.

02. 1992ஆம் ஆண்டில் ரம்ழான் மாதத்தின் போது முஸ்லீம் அரச அலுவலர்களும்/பணியாளர்களும் தொழுகையிலும் பிற மத வழிபாடுகளிலும் கலந்து கொள்வதற்கு ஒழுங்குகளைச் செய்யுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

03. தொழுகைகள் நாளாந்தம் பின்வரும் நேர அட்டவணைப்படி நிகழும்:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மு.ப. | 3.00 | முதல் | பி.ப. | 5.30 | வரை |
| மு.ப. | 6.00 | முதல் | பி.ப. | 7.00 | வரை |
| பி.ப. | 6.00 | முதல் | பி.ப. | 7.00 | வரை |
| பி.ப. | 8.00 | முதல் | பி.ப. | 10.00 | வரை |

04. இக்காலங்களின் போது விசேட லீவு வழங்குவதைத் தவிர்ப்பதற்காக இயலுமான விடத்து, வேலை மாற்றொழுங்குகள் ஒழுங்கு செய்யப்படலாம். ஆயினும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் விசேட லீவு அங்கீகரிக்கப்படலாம்.

05. மேலும், 1992 ரம்ழான் பெருநாளின் இறுதித் தேதிக்கு 14 நாட்கள் முன்னதாக அரச சேவை, அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சட்டவாக்கச் சபைகள் ஆகியவற்றில் கடமையாற்றும் தகைமையுடைய முஸ்லீம் அலுவலர்கள்/பணியாளர்கட்கு பண்டிகை முற்பணம் வழங்கத் தயைபுரிந்து நடவடிக்கை எடுக்கவும்.

ஒப்பம்: எம். என். ஜுனைட்.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.